திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**"நோய்களை நீக்கும் நரி வெங்காயம்'**

First Published : 30 Dec 2010 12:00:00 AM IST



செஞ்சி பகுதியில் காடுகளில் காணப்படும் காட்டு வெங்காயம் (எ) நரி வெங்காயம்.

செஞ்சி: செஞ்சி பகுதி காடுகள் மற்றும் மலை ஓரங்களில் காணப்படுவது நரி வெங்காயம் எனப்படும் காட்டு வெங்காயம். இதை அப்படியே உட்கொண்டால் நச்சு பரவி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். இதை பக்குவப்படுத்தி முறையாக பயன்படுத்த வேண்டும்.

அரிஜீனீயா என்ற தாவரவியல் பெயரைக் கொண்ட இந்த நரி வெங்காயம் லிலியேசி (ப்ண்ப்ண்ஹஷ்ரீஹங்) என்ற குடும்பத்தை சேர்ந்தவை. இவை 200 கிராம் முதல் 500 கிராம் வரை எடை கொண்டவை. பார்ப்பதற்கு அசல் வெங்காயத்தைப் போலவே காட்சி அளிக்கிறது. அதிக நேரம் கையில் வைத்திருந்தால் கையில் அரிப்பு ஏற்படுகிறது. கடந்த மாதம் பெய்த தொடர் மழையால் கணக்கன்குப்பம் காட்டுப் பகுதிகளில் உள்ள தாவரங்கள் செழிப்புடன் காட்சி தருகின்றன. செஞ்சியை சுற்றியுள்ள காடுகளில் ஏராளமான மூலிகைத் தாவரங்கள் உள்ளன. மலைச் சரிவில் இவை அதிகம் காணப்படுகிறது. கணக்கன்குப்பத்தைச் சேர்ந்த முனுசாமி என்பவர் காட்டில் இருந்து பறித்து செஞ்சி அரசு மருத்துவமனை சித்த மருத்துவர் ரவிச்சந்திரனிடம் நரி வெங்காயத்தை அளித்தார்.

தற்போது இந்த வெங்காயம் அரசு மருத்துமனையில் உள்ளது. இது குறித்து மருத்துவர் ரவிச்சந்திரன் கூறியது: "இது மிக அரிய மூலிகைத் தாவரம். நரி வெங்காயம் எனப்படும் இது, இதய கோளாறுகளுக்கு சிறந்த மருந்தாகும். இதில் ஸ்கைலாரின் ஏ, ஸ்கைலாரின் பி முதலிய இதயக் கிளைக்கோசைடுகள் உள்ளன. மேலும் பாம்பு நஞ்சை முறியடிக்கும் ஆற்றல் கொண்டது. கோழைகட்டு, இருமல், இரைப்பை, மூலம் ஆகிய நோய்களை குணமாக்கும் வல்லமையும் படைத்தது.

கால் ஆணி நோய்க்கு நரி வெங்காயத்தை சுட்டு அவ்விடத்தில் சூட்டோடு மிதித்தால் இந் நோய் நீங்கும். இதை ஆலோசனையின்றி யாரும் உட்கொள்ளக்கூடாது. அப்படி உட்கொண்டால் நச்சு தன்மையை ஏற்படுத்தி உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்' என்றார்.

**மஞ்சள் சாகுபடியில் ரூ. 4 லட்சம் நிகர லாபம்**

First Published : 30 Dec 2010 12:00:00 AM IST



விழுப்புரத்தையடுத்த கோலியனூர் கூட்டுரோடு அருகே செழித்தோங்கி வளர்ந்துள்ள மஞ்சள் பயிர்.

விழுப்புரம்: விழுப்புரத்தை அடுத்த, கோலியனூரில் சூசைநாதன் என்ற விவசாயி, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் பரிந்துரை செய்தவாறு மஞ்சள் பயிர் செய்து அறுவடைக்கு பின் மிகுந்த லாபத்தை எதிர்பார்க்கவுள்ளனர்.

தனது அனுபவம் குறித்து அவர் கூறியதாவது: சாகுபடிக்குத் தேர்வு செய்த ஒன்றரை ஏக்கர் நிலத்தை 4 தடவை உழவு செய்து, 8 டிராக்டர் லோடுகள் தொழுஉரம் இட்டு, நாட்டுக் கலப்பை மூலம் கடைசி உழவு செய்து 37.5 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைத்து இதில் 15 செ.மீ. இடைவெளியில் மஞ்சள் கிழங்குகளை ஜூன் மாதம் நடவு செய்தேன். 1200 கிலோ விதை மஞ்சள் கிழங்குகள் பயன்படுத்தப்பட்டன.

நீர் நிர்வாகம்: பார்களுக்கு இடையே நீர்ப்பாசனம் செய்து மஞ்சள் விதைக் கிழங்கை பார்களின் பக்கவாட்டில் நடவு செய்யப்பட்டது. பிறகு ஐந்தாம் நாள் உயிர்த்தண்ணீர் பாய்ச்சப்பட்டது.பிறகு வாரம் ஒருமுறை மண்ணின் ஈரத்துக்கு ஏற்றார்போல் நீர்ப்பாசனம் செய்யப்பட்டது.

மேலுரம்: நடவு செய்த இரண்டாம் மாதம் யூரியா 2 மூட்டை, 17:17:17 காம்ப்ளெக்ஸ் 1 மூட்டை, டிஏபி 1 மூட்டை வீதம் களையெடுத்து உரம் இட்டு, மண் அணைத்து நீர்ப்பாசனம் செய்யப்பட்டது.நடவு செய்த மூன்றாம் மாதம் காம்ப்ளெக்ஸ் 4 மூட்டை, பொட்டாஷ் 2 மூட்டை, யூரியா 2 மூட்டை வீதம் செடிகளுக்கு அருகில் இட்டு நீர்ப்பாசனம் செய்யப்பட்டது. நான்காம்

மாதம் காம்ப்ளெக்ஸ் 1 மூட்டை, பொட்டாஷ் 6 மூட்டை, டிஏபி 1 மூட்டை வீதம் இட்டு நீர்ப்பாசனம் செய்தேன்.

நடவு செய்த 6-ம் மாதத்தில் வேப்பம் பிண்ணாக்கு 50 கிலோ, பொட்டாஷ் 4 மூட்டை, அம்மோனியம் சல்பேட் 1 மூட்டை வீதம் இட்டு நீர்ப்பாசனம் செய்து பராமரிக்கப்பட்டது.

மேலும் கோலியனூர் ஒன்றிய தோட்டக்கலைத் துறையினர் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் வழங்கிய 112 கிலோ மண்புழு உரம், 20 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 12.50 கிலோ நுண்ணூட்ட உரங்கள், 8 கிலோ 19:19:19 மற்றும் 4 கிலோ 13:00:45 நீரில் கரையும் உரங்கள், செடிக்கு செடி இட்டு மண் அணைத்து நீர்ப்பாசனம் செய்யப்பட்டது.பின்னர் 6 கிலோ சூடோமோனாஸ் உயிர் உரத்தை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து செடிக்கு செடி இட்டு நீர்ப்பாசனம் செய்யப்பட்டது.

பயிர் பாதுகாப்பு: மஞ்சள் இலைகளில் தோன்றிய இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்த டைமெத்தியேட் மருந்து 2 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீரிலும், இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த கார்பன்சாசிம் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரிலும் கலந்து தெளித்து பயிர் பாதுகாப்பு செய்யப்பட்டது என்றார் சூசைநாதன்.

இது குறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் வீராசாமி கூறியது: தோட்டக்கலைத் துறையின் பரிந்துரையின் பேரில் முறையாக அந்த விவசாயி பயிர் பாதுகாப்பு செய்துள்ளார். மார்ச் மாதத்தில் அறுவடைக்கு எதிர்பார்க்கப்படுகிறது. தற்சமயம் உள்ள நிலவரப்படி சராசரியாக செடிக்கு 170 கிராம் வரை மஞ்சள் கிழங்குகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மொத்தமாக ஒன்றரை ஏக்கர் பரப்பளவிலிருந்து 15 மெட்ரிக்டன் பச்சை கிழங்குகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

உலர் மஞ்சள் 3000 கிலோ கிடைப்பதற்கு பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன.இன்றைய சேலம் லீ சந்தை நிலவரப்படி குவிண்டால் ரூ. 17 ஆயிரத்துக்கு விற்பனை செய்தாலும் ரூ. 5.10 லட்சம் வரை மொத்த வருமானமாகவும், ரூ. 4.10 லட்சம் வரை நிகர லாபமாகவும் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றார்.

**செம்மை கரும்பு சாகுபடியில் செலவு குறைவு; மகசூல் அதிகரிப்பு**

First Published : 30 Dec 2010 12:00:00 AM IST



செம்மைக் கரும்பு சாகுபடி முறையில் உருவாக்கப்பட்ட கரும்பு நாற்று.

கடலூர்: உலக அளவில் பிரேஸிலுக்கு அடுத்தபடியாக, கரும்பு உற்பத்தியில் இந்தியா 2-வது இடம் வகிக்கிறது. இந்தியாவில் 571 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

குறிப்பாக, தமிழகத்தில் ஹெக்டேருக்கு சராசரியாக 106 டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு 10 சதவீதம்.

கடந்த 10 ஆண்டுகளில் கரும்பு விவசாயம் பெரும் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்து வருகிறது. தமிழகத்திலும் கரும்பு உற்பத்தி ஆண்டுக்கு ஆண்டு ஏற்ற இறக்கங்களைக் கொண்டதாக மாறிவிட்டது.

எனவே, கரும்பு உற்பத்தியை பெருக்குவதில், சாகுபடி செலவைக் குறைப்பதில், அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருக்கிறது. எனவே செம்மை நெல் சாகுபடியைப் போல், செம்மைக் கரும்பு சாகுபடி முறை, விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகளால் பரிந்துரைக்கப் படுகிறது.

கரும்பு சாகுபடியில் புதிய அணுகுமுறையான, செம்மைக் கரும்பு சாகுபடி மூலம் (நன்ள்ற்ஹண்ய்ஹக்ஷப்ங் நன்ஞ்ஹழ் ஐய்ண்ற்ண்ஹற்ண்ஸ்ங்) நீர் சேமிப்பு, விளைச்சல் அதிகரிப்பு அம்சங்கள் அதிகரிக்கிறது. குறைந்த விதை நாற்றைப் பயன்படுத்தி, குறைந்த தண்ணீரில், சரியான ஊட்டச்சத்து அளித்து, சரியான பயிர் பராமரிப்பையும் பயன்படுத்தி, அதிக மகசூல் பெறமுடியும் என்கிறார்கள் வேளாண் விஞ்ஞானிகள்.

கரும்பு விதைக் கரணைகள் மூலம் புதிய கரும்பை உற்பத்தி செய்வதற்குப் பதில், கரும்பில் உள்ள விதைப் பருக்கள் சீவல்களைக் கொண்டு (ஆன்க் இப்ண்ல்ள்), பாலித்தீன் பைகள் அல்லது பிளாஸ்டிக் டிரேக்களில் நாற்றங்கால் தயாரித்து, பின்னர் வயலில் நடவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்படுகிறது.

7 முதல் 9 மாதங்கள் முதிர்ந்த கரும்பில் இருந்து விதைப் பருக்களின் சீவல்கள் வெட்டுக் கருவிகள் மூலம் வெட்டி எடுக்கப்படுகிறது. இதற்கான இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. விதை நேர்த்தியும் செய்யப்பட வேண்டும். 25 முதல் 35 நாள்கள் ஆன நாற்றுகள் வயல்களில் நடப்படும். நடவு செய்யும்போது வரிசைக்கு 5 அடி இடைவெளியும், நாற்றுக்கு நாற்று 2 அடி இடைவெளியும் விட்டு நடவு செய்யப்பட வேண்டும். இதன்மூலம் ஊடுபயிர் செய்தல், இயந்திரம் மூலம் களையெடுத்தல், அறுவடை போன்ற பணிகளும் எளிதாகிறது.

ஊடுபயிராக 3 மாதங்கள் வரை தட்டைப் பயறு, கொண்டைக் கடலை, உருளைக் கிழங்கு, கோதுமை, தர்பூசணி, போன்றவற்றைப் பயிரிடலாம். ஊடுபயிர்கள் கரும்பு வளர்ச்சிக்கும் உதவுகின்றன. விதைக் கரணைகள் மூலம் புதிய கரும்பை உற்பத்தி செய்ய, ஏக்கருக்கு 4 டன்கள் வரை கரும்பு தேவைப்படுகிறது. ஆனால் செம்மைக் கரும்பு சாகுபடியில் 500 கிலோ (5 ஆயிரம் விதைச் சீவல்கள்) போதும்.

தேவையான அளவுக்கு மட்டும் ஈரப்பதம் இருக்கும் வகையில் நீர்ப்பாசனம், இயற்கை உரங்களைப் பயன்படுத்துதல், பராமரிப்புக்கு போதிய முக்கியத்துவம் அளித்தல், பயிருக்கு நல்ல காற்றோட்டம், சூரிய வெளிச்சம் ஆகியவற்றை அதிகரித்தல் மூலம் சாகுபடி காலத்தையும், செலவை குறைக்கவும், மகசூலை அதிகரிக்க முடியும் என்கிறார்கள் வேளாண் விஞ்ஞானிகள்.

இதுகுறித்து நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை அதிகாரி ஒருவர் கூறுகையில், செம்மைக் கரும்பு சாகுபடி மூலம், சாகுபடிச் செலவைக் குறைக்க முடியும். ஒரே மாதிரியான, தரமான கரும்பு நாற்றுகளை விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

இதனால் உற்பத்தி அதிகரிக்கும். நாற்று தயாரிக்க விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்து வருகிறோம். 4 இடங்களில் விளக்கப் பண்ணைகளும் அமைத்து இருக்கிறோம். கரும்பு நாற்றுகளை பிளாஸ்டிக் டிரேக்களில் வளர்க்கிறோம் என்றார்.

இதுகுறித்து நெல்லிக்குப்பம் அருகே எய்தனூரைச் சேர்ந்த விவசாயி நிரஞ்சன் கூறுகையில், செம்மை கரும்பு சாகுபடி குறித்து ஆந்திர மாநிலத்திலும், தஞ்சை மாவட்டம் காட்டுத் தோட்டத்திலும் பயிற்சி பெற்றேன். நான், எய்தனூரில் 12 ஏக்கரில் செம்மைக் கரும்பு சாகுபடி முறையில் கரும்பு உற்பத்தி செய்ய திட்டமிட்டு இருக்கிறேன்.

செம்மைக் கரும்பு சாகுபடி மூலம் சாகுபடிச் செலவு குறைவு, ஊடுபயிர் செய்யலாம். தண்ணீர் செலவு குறைவு. மகசூல் அதிகரிக்கிறது போன்ற விவரங்களை ஆந்திர மாநில விவசாயிகள் மூலம் நேரடியாகத் தெரிந்து கொண்டேன். இந்தியா முழுவதும் செம்மைக் கரும்பு
சாகுபடி முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

**பொன்னான பூமி புண்ணாகலாமா?**

ஆர்.எஸ்.நாராயணன்

First Published : 30 Dec 2010 12:36:48 AM IST

என்னுடைய கல்லூரி நாள்களில் கிராமத்தையும் விவசாயத்தையும் போற்றும் மிக அருமையான சினிமாவாக வெளிவந்த "மக்களைப் பெற்ற மகராசி'யில் பாடப்பட்ட ஒரு பாட்டு மருதகாசியின் காணிக்கை. ""பொன்னு விளையற பூமியடா, விவசாயத்தைப் பொறுப்பாச் செய்யிறமடா... மணப்பாறை மாடுகட்டி" தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் ஒலித்தது டி.எம்.எஸ். பாடிய சூப்பர்ஹிட் பாடல். பொன்னாக நெல்விளைந்த காலம், ஒரு மூட்டை நெல் விற்றால், ஒரு பவுன் வாங்கலாம். பொன்விளைந்தது என்றால் பூமியில் விளைந்த நெல், கோதுமை, பருப்பு, கடலை, தேங்காய் ஆகியவை பெற்ற உயர்வான பணமதிப்பு. நூறு தேங்காய் விற்றால் 2 பவுன் வாங்கலாம். நிஜமாகவே அந்தப் பாடல் வெளிவந்த காலகட்டத்தில் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளவில்லை. விளைவதை விற்று லாபத்தைத் தங்கமாக வாங்கி உயர்ந்தார்கள்.

இன்று விவசாயம் செய்து வாழ்பவர்களால் ஒரு பொட்டுத் தங்கம் கூட வாங்க முடியாது. விளைச்சலை விற்றாலும்கூட சாகுபடிக்குச் செய்த செலவை மீட்க முடியவில்லை. அன்று வாங்கிய தங்கமெல்லாம் இன்று அடகுக்கடைகளில் ஏலம் போய்க்கொண்டிருக்கின்றன.

அதைக் கவிஞர் பின்னர், ""கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி... ஒழுங்கா பாடுபடு வயல்காட்டில், உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில்'' என்று எம்.ஜி.ஆருக்குப் பாட்டு எழுதிக் கொடுத்தார்.

உண்மையில் கடவுள் கண்டெடுத்த தொழிலாளி ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்படுவதால் பொன்விளைந்த பூமியில், இன்று பித்தளைக்குக்கூட வழியில்லை. ஆகவேதான், உள்ளூரில் நிலத்தைத் தரிசாக்கிவிட்டு நைஜீரியாவில் நிலத்தை வாங்கி துவரை சாகுபடி செய்ய வேண்டும் என்று சரத்பவார் புத்தி புகட்டுகிறார். ஏனென்றால், இங்குள்ள விளைநிலங்களை டாடாவுக்கும், அம்பானிக்கும் குறைந்த விலைக்கு விற்றுத் தொழில் வளர்க்க வேண்டும். அதற்காகவே பொன்விளைந்த பூமி தரிசாகி வருகிறது. என்ன தொழில்? ஊழல் தொழில்தான். உலகளாவிய அளவில் ஊழல் தொழிலில் இந்தியா முதலிடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளன. முதலாளித்துவப் பொருளாதார அகராதியில் வளர்ச்சியின் அளவு கோலே ஜி.டி.பி. என்று சொல்லப்படும் தேசிய வருமான மதிப்பு. அந்தத் தேசிய வருமான மதிப்பில் ஊழல் தொழில் வருமானம் 70 சதவீதம் உள்ளது.

இந்தியாவின் அரசியல் வரலாற்றில் நேருவுக்குப் பின் யாரைப் பிரதமராக்கலாம் என்ற கேள்விக்குப் பெருந்தலைவர் காமராஜ் பதிலாயிருந்தார். அவரால் பிரதமராக முடியவில்லை என்றாலும், பிரதமர்களை அமர்த்தும் அளவுக்கு அதிகாரம் இருந்த காரணத்தால் அவருக்குக் "கிங் மேக்கர்' பட்டம் கிடைத்தது.

இன்று யாரைப் பிரதமராக்கலாம் என்ற கேள்விக்கு அம்பானி-டாடா ஏஜெண்ட், ராசாவை மட்டுமல்ல, ராணிகளையும், மந்திரிகளையும் நியமிக்கும் உரிமைகளையும் டெண்டர் இல்லாமல், ஏலம் இல்லாமல் வாங்கிவிட்டார்கள் என்பதைத்தான் வைஷ்ணவி கம்யூனிகேஷன்ஸ் உரிமையாளர் நீரா ராடியாவின் ஒலிநாடா நிரூபிக்கிறது.

இந்த நாட்டுக்குப் பல்லில்லாத ஒரு பிரதமர், தில்லியில் நடந்த 125வது காங்கிரஸ் மாநாட்டில், பிரதமருக்கு இடதுபுறம் சற்றுத் தூக்குதலாய் வீற்றிருந்த கட்சித்தலைவர் சோனியாவுக்கு ஊழலைப் பார்த்து ஆவேசம் வந்துவிட்டது.

""ஊழல்கள் அதிகம் பெருகுவது நிலக் கைப்பற்று, நில ஒதுக்கீடு போன்றவை என்பதால், அதிகாரிகளுக்குள்ள சிறப்பு அதிகாரங்களை மறுஆய்வு செய்ய வேண்டும். இயற்கை வளங்களைக் கொள்ளை போகாமல் முறைப்படுத்துவதில் ஒரு தெளிவான செயல்திட்டம் வேண்டும்...'' இப்படியான ஆவேசப் பேச்சுகள் எடியூரப்பாவுக்கும் சிங்கூர்-நந்திகிராம் புகழ் புத்ததேவுக்கும் இதர மாநில முதலமைச்சர்களுக்கும் குறிவைத்துள்ளது புரிகிறது.

இயற்கை வளங்களைக் கொள்ளை அடிப்பது - அதாவது விளை நிலங்கள் உள்பட கனிமம் நிறைந்த பகுதிகளைக் கொள்ளை போகாமல் முறைப்படுத்துவது என்றால் என்ன? நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத்தொடர் முடங்கியதால், சோனியா காந்தி கூறும் நிலக் கைப்பற்றை முறைப்படுத்தும் சட்டம் இயற்றப்படவில்லை. அதாவது, மத்திய, மாநில அரசுகள் பிரிட்டிஷார் காலத்தில் இயற்றப்பட்ட 1894 நிலக் கைப்பற்றுச் சட்டப்படி, ""பொது நலத்துக்காக'' நிலக் கைப்பற்று ஒப்புதல் தரப்படுகிறது. "தரிசு நிலம்' கைப்பற்றாகிறது.

1894 சட்டத்தில் உள்ள ஓட்டையைப் பயன்படுத்தி நில மாஃபியாக்கள் (அமைச்சர்களின் பினாமிகள்) கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான புறம்போக்கு ஆக்கிரமிப்புக்கு மேல் பட்டா நிலங்களையும் மலிவாக வாங்கி, நல்ல விலைக்கு விற்பதாகவும் ஒரு கருத்துண்டு. பொருளாதார மண்டலமே பொது நலந்தான் என்று பேசுமளவில் - பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கு விற்பனையாவதுடன் தனியார் கல்லூரிகள், தனியார் மருத்துவமனைகள் என்று பல பொதுநல ஒதுக்கீடுகள் உண்டு. சுற்றுச்சூழலுக்கு எமனும், இயற்கை வளத்தை அழிப்பதுமான தனியார் சுரங்கத் தொழில், "பொதுநலமே'.

மேல்தட்டு மக்கள் குடியிருப்புகளுக்காகப் பல அடுக்கு மாளிகைகள், கடற்கரையை ஒட்டி ஐந்து நட்சத்திர ஓட்டல்கள், கோல்ஃப் விளையாட்டு மைதானம், குதிரைப் பந்தய மைதானம் எல்லாமே "பொது நலந்தான்'.

பல்வேறு ஆங்கில நாளிதழ்கள் வழங்கும் தகவல்கள் அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளின் வளர்ச்சிப்பணி என்பது நிலத்தரகு. அதை மாஃபியாக்கள் செய்கின்றனர். விளை நிலங்களைத் தரிசாகப்போட்டுப் போலிச்சான்று பெற்று, குறைந்த விலைக்கு வாங்கி, கருப்பில் யாதி வெளுப்பில் பாதி என்று தக்க கமிஷனையும் பெற்றுக்கொண்டு தொழில் முதலைகளுக்கு விற்பது வளர்ச்சியின் சான்றாயுள்ளது.

நிலத்தை வாங்கும் தொழில் நிறுவனங்களுக்கு நிலத்தின் நிஜமான சொந்தக்காரர் யார் என்று தெரியாதபட்சத்தில் அரசு மூலமோ-மாஃபியாக்கள் மூலமோ நிலம் பெறப்படுகிறது. நத்தம், புறம்போக்கு, வனப்பகுதி எல்லாம் அரசு மூலம் விலை கொடுத்து விலையில்லாமல் சுருட்டிவிடலாம். பட்டா நிலத்தை அப்படிச் சுருட்ட முடியாது. மாஃபியாக்கள் உதவி வேண்டும். குறிப்பாக வனப்பகுதிகளில் உரிமை எழுத்தறிவில்லாத பழங்குடிகளுக்கு இருக்கும். பட்டா இருக்காது. அப்படிப்பட்ட இடங்களைக் கைப்பற்ற அம்மக்களை பயமுறுத்த தொழில் முனைவோர்களுக்கு மாஃபியாக்களின் துணை வேண்டும். பட்டா நிலங்கள் என்றால் பெரிய தொழில் முதலாளிகளுக்கு லாட்டாகக் கிடைக்கிறது. நூற்றுக்கணக்கானவர்களில் சிலருக்கு விற்க மனம் இருக்காது. தகாத விலை கொடுத்துத் தக்கவிலை பெறவும் நில மாஃபியாக்கள் உதவுவார்கள்.

இப்படிப்பட்ட பின்னணியில் 1894-நிலக்கைப்பற்றுச் சட்டம் திருத்தி முறைப்படுத்தப்படுகிறது என்றால் என்ன பொருள்? "இதுவரை முறையில்லாமல் வாங்கப்பட்ட நிலங்களுக்கு வாங்கியபின் புதியபட்டா வழங்கப்படும்' என்றுதான் பொருள்.

இந்த விஷயத்தில் தமிழ்நாட்டு வேளாண்துறை அமைச்சர், சோனியா காந்தியை முந்திக்கொண்டுவிட்டார். ""விளைநிலங்களை வாங்கி அதை வீட்டு மனைகளாகவோ தொழில் மனைகளாகவோ மாற்றுவதைத் தடை செய்யும் சட்டம் கடுமையாக்கப்படும்..." என்று அவர் பேசியுள்ளதை வரவேற்கலாம். இயற்றப்படாத ஒரு சட்டத்தை எப்படிக் கடுமையாக்குவது? யார் தவறு செய்கிறார்கள்? அப்படித் தவறு செய்யும் மாஃபியாக்கள் அமைச்சர்களுக்கு வேண்டியவர்களாக இருந்தால் எவ்வாறு தண்டிக்க முடியும்?

விஷம்போல் விலைவாசி ஏறுவதுபோல் நிலத்தின் விலையும் கற்பனைக்கு எட்டாத உயரத்தில் ஏறுகிறது. கடந்த மூன்றாண்டுகளில் மூன்று முதல் பத்து மடங்கு ஏற்றத்தைக் கவனிக்கலாம்.

உதாரணமாக, நான் இயற்கை விவசாய மாதிரிப் பண்ணை-பயிற்சி நடத்த 2 ஏக்கர் 5 லட்ச ரூபாய்க்கு 2007-ல் வாங்கினேன். மிகவும் மோசமான களர் நிலம் இன்று திருத்தப்பட்டுள்ளது. இன்று 30 லட்ச ரூபாய்க்கு அதே நிலம் மதிப்பிடப்படுகிறது. எனது சுயநலம் மகிழ்ந்தாலும் பொதுநலம் வருந்துகிறது. இப்படிப்பட்ட விலை ஏற்றத்தைத் தவிர்த்தால்தான் நாடு நலம்பெறும். சட்டத்தைக் கடுமையாக்குவது என்றால் நில மாஃபியாக்களையும், ரியல் எஸ்டேட்டுகளையும் தடை செய்யவேண்டும்.

விளைநிலங்கள் தரிசாக மாற்றப்பட்டு விற்பனை செய்யப்படுவதைக் கண்டிக்கும் விவசாய அமைச்சர், தரிசின் இலக்கணம் என்ன? அதன் வரையறை எது என்பதையும் யோசித்தல் நலம். விவசாயத்துக்கே தகுதியில்லாத பாறைநிலம், சரளை, சேற்றுநிலம், உவர்-சுண்ணாம்பு நிலம் பலநூறு ஆண்டுகளாகவே புல்கூட முளைக்காத நிலம் என்பதுவே "நிரந்தரத்தரிசு'. ஓராண்டு சாகுபடி செய்துவிட்டு மறுஆண்டு சும்மாவிட்டால் அது நஞ்சைத் தரிசாகவோ, புஞ்சைத் தரிசாகவோ உள்ள சாகுபடி நிலமேதவிர, நிரந்தரத் தரிசு இல்லை.

விவசாயிகளின் இயலாமையைப் பயன்படுத்தி, விளைநிலங்களைத் தரிசாக்கி, பொன்னான பூமியை - நஞ்சை - புஞ்சைத் தரிசுகளில் குத்துக்கல் குத்தியும் முள்வேலியிட்டும் புண்படுத்துவது நியாயந்தானா?

இன்றுள்ள ஊழல் சமுதாயத்தின் ஆணிவேர்களாகத் திகழும் அக்கிரமக்காரர்கள் ஒவ்வொரு ஊரிலும் பெருகிவிட்டார்கள். மீண்டும் ஓர் ஏசுவோ, காந்தியோ விவேகானந்தரோ பிறந்து இவர்களைத் திருத்த முடியாது. ஒவ்வொரு ஊரிலும் ஒரு கிருஷ்ணபரமாத்மா தோன்றி துஷ்ட நிக்ரஹ பரிபாலனம் செய்ய வேண்டும். அப்போதுதான் பூமியில் பொன் விளையும்.

**விவசாயிகள் அடையாள அட்டை வேளாண் துறை அறிவிப்பு**

First Published : 30 Dec 2010 08:45:21 AM IST

உளுந்தூர்பேட்டை, டிச.29: விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தைச் சேர்ந்த அனைத்து விவசாயிகளுக்கும் அவர்களது புகைப்படத்துடன் கூடிய விவரங்கள் அடங்கிய அடையாள அட்டையினை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு:

விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி, கல்வித் தகுதி,வயது, தொலைபேசி விவரம், புன்செய், நன்செய் மற்றும் தோட்டக்கால் நிலங்களின் சர்வே எண், உட்பிரிவு விவரம், மின் இணைப்பு விவரம் மற்றும் வங்கி அல்லது கூட்டுறவு வங்கியின் கணக்கு எண் ஆகிய விவரங்களுடன் அடையாள அட்டை வழங்கப்பட உள்ளது.

இந்த அட்டை இருந்தால்தான் இனி வரும் காலங்களில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்கள் பெறமுடியும். இதனால் விவசாயிகள் திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள விண்ணப்பத்தை பெற்று பூர்த்தி செய்து, உடனடியாக நில உரிமைக்கான சான்று, வங்கி அல்லது கூட்டுறவு வங்கி பாஸ் புத்தக நகல் மற்றும் படிப்பு, வயதுக்கான சான்றுடன் இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் இணைத்து கொடுக்கப்பட வேண்டும்.

பின்னர் அடையாள அட்டையினை உரிய அலுவலரின் கையொப்பத்துடன் கிராமங்களில் விழா மூலம் வழங்கப்படும் என திருவெண்ணெய்நல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பா.தேவநாதன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்பு பயிற்சி**

First Published : 30 Dec 2010 09:03:03 AM IST

மதுராந்தகம், டிச.29: செய்யூர் வட்டம், இல்லீடு கிராமத்தில் உள்ள தேசிய வேளாண்மை நிறுவனப் பயிற்சிக் கூடத்தில் கால்நடை வளர்ப்பு குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி புதன்கிழமை தொடங்கியது.

மதுராந்தகம் கோட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் இப் பயிற்சி முகாம் 3 நாள் நடத்தப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்ட காலநடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் டாக்டர். பதான் நசுருல்லாகான் தலைமை தாங்கி பயிற்சியினை தொடக்கிவைத்தார்.

சிட்லப்பாக்கம் கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துணை இயக்குநர் டாக்டர்.பி.துரைராசன் முன்னிலை வகித்தார். கோட்டப் பராமரிப்பு துறையின் உதவி இயக்குநர் டாக்டர். அம்பேத்கர் வரவேற்று,கால்நடை வளர்ப்பு குறித்த கையேடு,பயிற்சிப் பொருள்களை

வழங்கினார். கால்நடை துறையின் வல்லுநர்களை கொண்டு கால்நடை வளர்ப்பு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயிர் பாதிப்பு: முழு நிவாரணம் கிடைக்குமா?**

First Published : 30 Dec 2010 08:43:25 AM IST

கடலூர், டிச. 29: கடலூர் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, முழு நிவாரணம் கிடைக்குமா என்ற ஐயம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

÷கடலூர் மாவட்டத்தில் இவ்வாண்டு சம்பா பருவத்தில், டெல்டா பகுதிகளில் 1.45 லட்சம் ஏக்கர் உள்பட 2.5 லட்சம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டது. திட்டக்குடி, விருத்தாசலம் தாலுகாக்களில் 28 ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம், 15 ஆயிரம் ஏக்கரில் பருத்தி உள்ளிட்ட மானாவாரிப் பயிர்கள் பயிரிடப்பட்டு இருந்தன.

÷வடகிழக்குப் பருவ மழை மற்றும் ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, வீராணம் ஏரியில் இருந்து உபரிநீர் திடீரென வெளியேற்றம் காரணமாக, 90 ஆயிரம் ஹெக்டேரில் நெல் உள்ளிட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டன.

÷குமராட்சி, காட்டுமன்னார்கோயில், பரங்கிப்பேட்டை, குறிஞ்சிப்பாடி வட்டாரங்களில் நெற்பயிர்கள் அதிகம் பாதிக்கப்பட்டன. பயிர் பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக கணக்கெடுக்கும் பணி, கடந்த 15-ம் தேதி தொடங்கியது.

÷வருவாய்த் துறை, வேளாண்துறை இணைந்து கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டு உள்ளன. இப்பணி இன்று (வியாழக்கிழமை) முடிவடையும் என்றும் 31-ம் தேதி ஆட்சியரிடம் அறிக்கை அளிக்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

÷மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, 50 சதவீதத்துக்கு மேல் பாதிப்பு இருந்தால் மட்டுமே, முழுமையான பாதிப்பு என கணக்கிடப்படுகிறது.

÷ஆனால் விவசாயிகள் இதை ஏற்க மறுக்கிறார்கள். மழைநீரில் மூழ்கி அழுகிவிட்ட பயிரை மட்டும்தான் முழுப்பாதிப்பாக கணக்கிடுகிறார்கள். ஆனால் மூழ்கிய நீரில் இருந்து தப்பிய நெற்பயிர்களும், அதிக மழையால் முதிர்ந்த நெற்பயிர்களும் பாதிக்கப்பட்டு உள்ளன.

÷இன்றைய தினத்தில் அப்பயிர்கள் பச்சை நிறத்தில் செழிப்பாகக் காட்சி அளிக்கின்றன. ஆனால் கதிர் வரும்போது 50 சதவீதத்துக்கு மேல் பதராகி விடுகிறது.

÷நெல் மணிகள் கருப்பாக மாறிவிடுகின்றன. மகசூல் பாதிப்பு அதிகமாக இருக்கும். இதைப் பதிவு செய்ய, அதிகாரிகள் மறுக்கிறார்கள். இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பலருக்கு நிவாரணம் கிடைக்காமல் போகும் அபாயம் உள்ளது என்றும், தெரிவிக்கிறார்கள்.

÷இது குறித்து உழவர் மன்றங்களின் கூட்டமைப்பின் கடலூர் மாவட்டத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "குறைந்த நாள்கள் தண்ணீரில் மூழ்கிய பயிர்கள் நீர் வடிந்ததும், உரமிட்டு பாதுகாத்ததன் விளைவாக, இன்று பச்சை பசேலென்று காட்சி அளிக்கின்றன. ÷தொடர் மழையில் சிக்கிய முதிர்ந்த பயிர்கள் பால் பிடிக்கும் நிலையில் இருந்தன. அவைகள் இன்று செழிப்பாகத் தெரிந்தாலும், மகசூல் 50 சதவீதம் தேறுவது கடினம், பதறாகத்தான் இருக்கும். மக்காச்சோளம் நன்கு விளைந்த கதிரில் 18 அடுக்கு மணிகள் இருக்கும். ஆனால் மழை பாதித்த கதிர்களில் 13 அடுக்குதான் உள்ளது. மக்காச்சோளம் செடிகள் பல, மழையில் சாய்ந்து விட்டன.

÷அவற்றில் மகசூல் எதிர்பார்க்க முடியாது. மகசூல் கிடைத்தாலும், தரமாக இருக்காது. பாதிப்பை தொழில்நுட்ப ரீதியாகக் கணக்கிட அதிகாரிகள் மறுக்கிறார்கள். ÷கிராம அதிகாரிகள் தங்கள் அடங்கல் பதிவேட்டில், நிலங்களில் உள்ள பயிர்களை முறையாகப் பதிவு செய்யாமல் இருப்பதும், பாதிப்பைக் கணக்கிடுவதில் சிக்கலை ஏற்படுத்துகிறது. வேளாண் அலுவலர்களின் கருத்தை வருவாய்த் துறையினர் ஏற்க மறுக்கிறார்கள். வேளாண் காப்பீட்டுத் திட்டத்திலும் இழப்பீடு கிடைக்குமா என்ற சந்தேகம் உள்ளது' என்றார்.

÷இது குறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகையில், "கணக்கெடுப்புப் பணிகளை முடித்து, 31-12-2010 அன்று ஆட்சியரிடம் அறிக்கை அளிக்கப்படும். பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்க முதல் கட்டமாக ரூ. 23 கோடி, கூட்டுறவு மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டு விட்டது.

÷அனைத்து வகை பயிர்களுக்கும், 40 ஆயிரம் ஹெக்டேருக்கு நிவாரணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

÷மத்திய அரசின் வழிகாட்டுதல்படி, 50 சதவீதத்துக்கு மேல் பாதிப்பு மட்டுமே பாதிப்பு பதிவு செய்யப்படும்.

÷தொழில்நுட்ப ரீதியாவும் நெற்பயிர் பாதிப்பு கணக்கிடப்பட்டு உள்ளது. பருத்தி மக்காச் சோளம் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களிலும் பாதிப்பு கணக்கிடப்பட்டு இருக்கிறது.

÷2005 மற்றும் 2008-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் வழங்கும்போது, மொத்தமாக கிராமங்களில் நிவாரணத் தொகையை வழங்கி, விவசாயிகள் அனைவரும் சமமாகப் பிரித்துக் கொண்டனர். ஆனால் இந்த ஆண்டு அப்படி அனுமதிக்க வில்லை' என்றார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 29 Dec 2010 09:55:14 AM IST

ஈரோடு, டிச. 28: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 86.70 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,764 கன அடி தண்ணீர் வந்தது. பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு

2,000 கன அடி, ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறக்ககப்பட்டுள்ளது. நீர் இருப்பு 19.50 டிஎம்சி

**செல்லம்பட்டி பகுதியில் நெற்பயிரில் குலைநோய்**

First Published : 29 Dec 2010 12:15:11 PM IST

உசிலம்பட்டி, டிச. 28: மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அருகே செல்லம்பட்டி பகுதியில் நெற்பயிரில் குலைநோய் தாக்குதலால் நெல் மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பருவ மழை நன்றாகப் பெய்ததால், சுமார் 5 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதில் கர்நாடகா பொன்னி உள்ளிட்ட நெல் ரகங்களை தற்போது வானிலை மாற்றம் காரணமாக, அதிக பனிப் பொழிவு உள்ளதால் குலைநோய் தாக்கி உள்ளது. மேலும் செந்தாழை, இலைப்புள்ளி நோயும் பரவலாகக் காணப்படுகிறது. இதனால் உற்பத்தி பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இதுகுறித்து, செல்லம்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க உதவி இயக்குநர் அழகப்பன், வேளாண்மை உதவி அலுவலர் பூமிநாதன் ஆகியோர் தெரிவிக்கையில் குலைநோய் பாதிப்பிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற சூடோமோனாஸ் அல்லது ட்ரைசைக்ளோஜோல் மருந்தினை வாங்கித் தெளிக்கலாம் என்றனர்.

இதுதொடர்பாக விவரம் அறிய, செல்லம்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு பயன் அடையலாம் என விவசாயிகளிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

**கோழிகளின் தீவன எடுப்பு அதிகரிக்கும்: வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்**

First Published : 29 Dec 2010 11:06:19 AM IST

நாமக்கல், டிச.28: கோழிகளின் தீவன எடுப்பு கணிசமான அளவுக்கு அதிகரிக்கும் என நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள மேற்கு நோக்கிய குறைந்த அழுத்த காற்று மண்டலத்தால் அடுத்த மூன்று நாள்களுக்கு நாமக்கல் மாவட்டத்தில் வானம் அதிக மேகமூட்டத்துடன் காணப்படும்.

வரும் புதன்கிழமை மழை பெய்ய அதிக வாய்ப்புள்ளது. வியாழன், வெள்ளிக்கிழமைகளில் வான மேகமூட்டத்துடன் காணப்பட்டாலும், மழை வாய்ப்பு குறைவு.

வெப்பநிலை பகலில் அதிகபட்சம் 28 டிகிரி செல்சியஸ், இரவில் குறைந்தபட்ச 17 டிகிரி செஸ்சியஸ் இருக்கும். மேற்கண்ட தட்பவெப்பநிலை கோழிகளுக்குச் சாதகமானது. இதுபோன்ற சீதோஷ்ண நிலையில் கோழிகள் வழக்கத்துக்கு மாறாக அதிக தீவனத்தை உட்கொள்ளும்.

கோழிகளின் தீவன எடுப்பு அதிகரித்துக் கொண்டே சென்றால், அதைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை பண்ணையாளர்களுக்கு ஏற்படும்.

தீவன எடுப்பை கட்டுப்படுத்தினால், முட்டை உற்பத்தி பாதிக்கும்.எனவே, தீவனத்தில் அதிக எரிசக்தியும், அளவான புரதமும் சேர்க்க வேண்டும். உயர்மனைகளின் பக்கவாட்டில் படுதாவை 3.5 அடி உயரத்தில் கட்டுவது பயன் அளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேர்அழுகல் நோயால் வெற்றிலை சாகுபடி பாதிப்பு**

First Published : 29 Dec 2010 10:49:04 AM IST

பரமத்தி வேலூர், டிச.28: பரமத்தி வேலூர் வட்டத்தில், வேர்அழுகல் நோய் தாக்குதலால் வெற்றிலை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

பரமத்தி வேலூர் வட்டத்தில் உள்ள காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், வேலூர், பொத்தனூர், நன்செய்இடையாறு, குப்புச்சிபாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன் பெய்த தொடர் மழையால் வெற்றிலை பயிரை வேர் அழுகல் நோய், வாடல் நோய், செம்பட்டை நோய் ஆகியவை தாக்கியுள்ளது.

ஒரு ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்ய சுமார் ரூ. 10 லட்சம் செலவாகிறதாம். இதில் முதல் வருடத்தில் கிடங்கு வெட்டுதல், விதை நடுதல், வெற்றிலை கொடி நடுதல், விட்டம் கட்டுதல், குத்தகை மற்றும் பராமரிப்பு ஆகியவை செலவுகளும் அடங்கும். இரண்டாவது வருடத்தில் தான் வெற்றிலை விவசாயிகளுக்கு வருவாய் கிடைக்கும்.

ஆனால் இந்த வருடம் தொடர் மழையால் வெற்றிலையில் நோய்த்தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக அரசு, மழையால் பாதிக்கப்படும் பிற பயிர்களுக்கு இழப்பீடு வழங்குவதைப் போல் வெற்றிலை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கரும்பு சாகுபடிக்கான வேளாண் கருவிகள் பயிற்சி முகாம்**

First Published : 29 Dec 2010 02:46:47 PM IST

பெரம்பலூர், டிச. 28: பெரம்பலூர் அருகேயுள்ள வாலிகண்டபுரம் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் அறிவியல் மையம் சார்பில், கரும்பு சாகுபடிக்கான வேளாண் கருவிகள் குறித்த பயிற்சி முகாம் தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமுக்கு, திருச்சி வேளாண் பொறியியல் துறை கண்காணிப்புப் பொறியாளர் பா. சுந்தர் தலைமை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ரெ. ரகுநாதன் முன்னிலை வகித்தார்.

முகாமில் பயிற்சி பெறுவோரிடம் முன் அறிவு பரிசோதனை செய்யப்பட்டு, பல்வேறு தலைப்புகளில் பயிற்சி மற்றும் வேளாண் கருவிகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில் செயற்பொறியாளர் இரா. மணி பயிற்சி திட்டம் குறித்து விளக்கி பேசினார். உதவி செயற் பொறியாளர் ந. ராஜேந்திரன், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சவுந்திரராஜன் உள்ளிட்ட வேளாண் அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, உதவி செயற் பொறியாளர் வி. ராஜேந்திரன் வரவேற்றார். ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து நன்றி கூறினார்.

**பண்ணைசாரா சிறப்புக் கடன் தீர்வு திட்டத்துக்கு கால நீட்டிப்பு**

First Published : 29 Dec 2010 02:45:49 PM IST

பெரம்பலூர், டிச. 28: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் நிலுவையில் உள்ள பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்புக் கடன் தீர்வு திட்டத்துக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்றார் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மண்டலத்திலுள்ள பெரம்பலூர், அரியலூர் மாவட்ட கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகள் உள்ளிட்டவை மூலம் வழங்கப்பட்ட பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்பு கடன் தீர்வு திட்டத்தில் 31.3.2007-ல் முழுமையாக தவணை தவறி, வசூலாகாமல், நிலுவையில் உள்ள

பண்ணைசாரா கடன்களுக்கான சிறப்பு தீர்வு திட்டத்துக்கு, தமிழக அரசு 31.12.2011 ஆம் தேதி வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி ஏற்கெனவே பண்ணைசாரா கடன் சிறப்பு தீர்வு திட்டத்தில் இணைந்து, 25 சதத் தொகை செலுத்தியவர்கள் மீதம் செலுத்த வேண்டியத் தொகையை ஒரே தவணை அல்லது அதிகபட்சமாக நான்கு காலாண்டு தவணைகளில் 31.12.2011-க்குள் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் தகுதி இருந்தும், இதுவரை சேராதவர்கள், கடன்தாரர்கள் செலுத்த வேண்டியத் தொகையில் 25 சதத் தொகையை 28.2.2011-க்குள் செலுத்தி வங்கி, சங்கத்துடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மீதம் செலுத்த வேண்டியத் தொகையை ஒரு தவணை அல்லது அதிகபட்சமாக நான்கு காலாண்டு தவணையில் 31.12.20110 ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற கடன் தகுதி, உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய 6 சதம் வட்டி, அபராத வட்டி, இதர செலவினங்கள் தள்ளுபடி, கூட்டுறவு நிறுவனங்களுக்கு 4 சத அரசு மானியம் உள்ளிட்டவை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

இதுதொடர்பான விவரங்களுக்கு, பண்ணைசாரா கடன் நிலுவையில் உள்ள கடன்தாரர்கள் பெரம்பலூர், அரியலூர் சரக துணைப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள சம்பந்தப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**தாளவாடியில் விவசாயிகள் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2010,02:33 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண் கோட்டத்தின் சார்பில் விவசாயிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த விளக்க பயிற்சி முகாம் தாளவாடியில் நடந்தது.ஆசனூர், ஒசட்டி பகுதிகளில் ரோஸ்மேரி சாகுபடி செய்யும் விவசாயிகள் மற்றும் ஊட்டி ஹோப் நிறுவனம், வாணி அக்ரிகல்ச்சரல் நிறுவனத்தோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தனர்.கோபி கோட்ட வேளாண்மை அலுவலர் கார்த்திகேயன், மைராடா தோட்டக்கலை தொழில்நுட்ப அலுவலர் பச்சையப்பன், ஈரோடு அக்மார்க் ஆய்வக அலுவலர் விவேகானந்தன், சத்தி உதவி வேளாண்மை அலுவலர் தமிழ்செல்வன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயத்துக்கு நிறைவான உதவிகள் :கணிப்பாய்வு தலைவர் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2010,01:36 IST

தர்மபுரி: "தர்மபுரி மாவட்டத்தில் விவசாயத்துக்கு தேவையான அனைத்து உதவிகளும் அரசு வழங்கும்' என மாநில கணிப்பாய்வு தலைவர் அருள்மொழி தெரிவித்தார். தர்மபுரி மாவட்டத்தில் செயல்படுத்தும் அரசு நலத்திட்டங்கள், கட்டுமானப் பணிகள், சாலைப் பணிகள் மற்றும் அனைத்து துறை செயல்பாடுகள் குறித்த கணிப்பாய்வு கூட்டம் மாநில கணிப்பாய்வு தலைவர் அருள்மொழி தலைமையில் தர்மபுரி ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நேற்று நடந்தது. கலெக்டர் ஆனந்தகுமார் முன்னிலை வகித்தார். கணிப்பாய்வு தலைவர் அருள்மொழி பேசியது:தர்மபுரி மாவட்டத்தில் 2006 ம் ஆண்டில் ஆறு ஆயிரம் ஹெக்டேர் மா சாகுபடி செய்யப்பட்டது. இது தோடக்கலைத்துறையின் மைல்கல்லாகும். விவசாயிகளுக்கு தேவையான பூச்சிக்கொல்லிகள், சத்தான உரங்கள் தடையில்லாமல் வழங்கப்படும்.தர்மபுரி மாவட்டத்தில் 23,600 ஹெக்டேர் பரப்பளவில் பப்பாளி சாகுபடியாகியுள்ளது. அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவனையில் உள்ள மருத்துவ கழிவுகளை தனியார் நிறுவனம் ஒரு கிலோ இரண்டு ரூபாய் 70 பைசாவுக்கு வாங்கி சுற்று சூழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் அழிக்கிறது.மருத்துவ கழிவுகளை அப்புறப்படுத்தி அழிப்பது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படும். நகராட்சியில் நடைபெறும் பாதாளச் சாக்கடை பணிகள் 2011 ஜுன் மாதத்திற்குள் விரைந்து முடிக்க வேண்டும் என்றும், மழையால் பாதித்த சாலைகள் விரைந்து செப்பனிட வேண்டும் என்றார்.டி.ஆர்.ஓ., மகேஸ்வரி, திட்ட இயக்குனர் ரவிச்சந்திரன், மகளிர் திட்ட அலுவலர் ஜனகவள்ளி, பொதுப்பணித் துறை இன்ஜினியர் சண்முகம், மருத்துவமனை கண்காணிப்பாளர் செல்லப்பிள்ளை, உள்ளிருப்பு டாக்டர் சுந்தரவதனம் மற்றும் தோட்டக்கலை,நெடுஞ்சாலை, சத்துணவு, வருவாய்த்துறை உட்பட பல அரசு துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**டெல்டாவில் மீண்டும் தொடர்மழை :அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பெரும் தவிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 30,2010,01:21 IST

திருத்துறைப்பூண்டி: காவிரி டெல்டா கடைமடை பகுதியில் மீண்டும் மழை பெய்ய துவங்கியதால் அறுவடைக்கு தயாரான நெற் கதிர்களை அறுவடை செய்ய இயலாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.காவிரி டெல்டா பாசனத்துக்கு ஜூன் 12ல் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை காலம் கடந்து ஜூலை 28ம் தேதி திறக்கப்பட்டது. கடைமடை பகுதிக்கு தண்ணீர் முழுமையாக வந்து சேரும் முன்னரே முறை வைத்து தண்ணீர் திறக்கப்பட்டதால் விவசாய பணிகளில் தொய்வு ஏற்பட்டு காலதாமதமாக தொடங்கப்பட்டது.வடகிழக்கு பருவமழை நவம்பர் மாதத்தில் தொடர்ந்து பெய்ததால் இப்பகுதியில் ஓடும் கோரையாறு, பாமணியாறு, அரிச்சந்திரா

நதி ஆகியவற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு லட்சக்கணக்கான ஏக்கரில் சாகுபடி செய்த ஒரு போக சம்பா சாகுபடி நெற்பயிர்கள் நீரில் மூழ்கி பாதிக்கப்பட்டது. ஒரு சில இடங்களில் பயிரிடப்பட்டிருந்த சம்பா பயிர் நெற்கதிர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. தற்போது அறுவடைக்கு தயாரான நிலையில் மீண்டும் வங்க கடலில் ஏற்பட்டுள்ள புயல் சின்னம் காரணமாக காவிரி டெல்டா கடற்கரையோர மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்ய துவங்கியுள்ளது. இதனால் அறுவடை செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கடன் வாங்கி சாகுபடி செய்து மகசூல் பெற வேண்டிய நிலையில் அதை வீடு கொண்டு சேர்க்க முடியாத வேதனையில் விவசாயிகள் உள்ளனர்.* வேதாரண்யத்தில் கடந்த இரண்டு வாரங்களுக்கு பின் மீண்டும் இரண்டு நாட்கள் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கையும், விவசாயமும், பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை எட்டு வரை 57.4., மில்லி மீட்டர் மழையும், தலைஞாயிறில் 30 மி.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.கடல் சீற்றமாக காணப்படுவதால் கோடியக்கரை, ஆறுக்காட்டுத்துறை, புஷ்பவனம், வெள்ளப்பள்ளம், வானவன் மகாதேவி, போன்ற கடற்கரை கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் இரண்டாவது நாளாக கடலுக்குள் செல்லவிலை. நேற்று மதியம் லேசான சூரிய வெளிச்சம் தெரிந்தது.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்ட விவசாய பணி: அதிகாரிகள் ஆய்வு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,21:37 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி அடுத்த தொண்டாமுத்தூர் கிராமத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாய பணிகளை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.

பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட தொண்டாமுத்தூர் கிராமத்தில், வேளாண்மை இணை இயக்குனர் ராசு ஆய்வுப்பணியில் ஈடுபட்டார். இணை இயக்குனர் ஆய்வின் போது வேளாண் துணை இயக்குனர் நடராஜன், வேளாண்மை உதவி இயக்குனர் மோகனசுந்தரம், துணை வேளாண்மை அலுவலர் அசோகன், உதவி வேளாண்மை அலுவலர் பழனிசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

வேளாண்மை உதவி இயக்குனர் மோகனசுந்தரம் கூறியதாவது: ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு செயல்விளக்க திடலை தேர்வு செய்து பாசன பகுதியில் துவரை சாகுபடி செய்யும் திட்டத்தை ஊக்குவித்து வருகிறோம். துவரை விதை, உரம், பூச்சி மருந்து, இயற்கை உரங்கள் வழங்கப்படுகிறது. துல்லிய பண்ணையம் திட்டம் மூலம் நீர்வழி உரமிடும் போது தண்ணீரும், உரமும் சேதமின்றி கையாளப்பட்டது. இதனால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. தற்போது காய் பிடிக்கும் பருவத்தில் உள்ளது. காய்கள் காய்ந்ததும் அறுவடை செய்யப்படும். கடந்த செப்., 21ம் தேதி விதைப்பு செய்யப்பட்டது. மொத்தம் 120 நாட்களில் அறுவடை

செய்யப்படும். செயல்விளக்க திடலில் சாகுபடி செய்யப்பட்டுள்ள துவரையை மார்க்கெட் விலைக்கு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் கொள்முதல் செய்து கொள்ளும். அந்த விதைகளை மறுபடியும் விவசாயிகளுக்கு வழங்கி துவரை சாகுபடி பரப்பு, உற்பத்தி அதிகரிக்கப்படும் என்றார்.

**"பூச்சியினங்களுக்கும் முக்கியத்துவம் தர வேண்டும்'**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,21:24 IST

கோவை : ""வெப்ப மண்டல காடுகளில் வசிக்கும் பூச்சியினங்களுக்கு யானை, சிங்கம், புலி போன்ற விலங்குகளை போன்று முக்கியத்துவம் அளிக்காதது வேதனையளிப்பதாகும்,'' என, கோவையில் நடந்த கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. இந்திய வெப்ப மண்டல காடுகள் குறித்து கோவை, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் சார்பில் தேசியளவிலான கருத்தரங்கு நடந்தது.

கருத்தரங்கில், நிறுவன இயக்குனர் கிருஷ்ணகுமார் பேசியதாவது: குளிர்பிரதேச, பாலைவன மற்றும் நீர்நிலையுள்ள காடுகளின் மூலம் மக்களுக்கு போதிய பயன் கிடைப்பதில்லை. வெப்ப மண்டல காடுகளில் மட்டுமே மரம், உணவு, கால்நடை தீவனம், மருந்துகள் போன்ற பயன்கள் அதிகளவில் கிடைக்கின்றன; முக்கிய ஆதாரமாகவும் உள்ளன. பல்வேறு காரணங்களால் வெப்ப மண்டல காடுகளின் பரப்பளவு கணிசமாக குறைந்துள்ளது. அங்குள்ள அரிய வகை விலங்குகள், தாவரங்கள் வெகுவாக அழிந்து வரும் நிலையில், அவற்றை கண்டுபிடித்து பராமரிக்க வேண்டியுள்ளது. காடுகளில் வசிக்கும் வண்டு, பட்டாம்பூச்சி போன்ற பூச்சி இனங்களுக்கு, யானை, சிங்கம், புலி போன்ற விலங்குகளை போல் முக்கியத்துவம் அழிக்காதது வேதனையளிக்கிறது. ஆனால், இவை மகரந்த சேர்க்கைக்கு முக்கியமாக இருப்பதால், மகசூல் அதிகரிக்கிறது.

பூச்சியினத்தில் முன்பிருந்த பல அரிய வகை பட்டாம்பூச்சிகள் தற்போது இல்லை. "பேப்லியானிட்ஸ்' என்ற பட்டாம்பூச்சியின் மூலம், தற்போதைய காடுகளின் தன்மையை எளிதாக உணரலாம். பருவநிலை மாற்றம், வெப்பமயமாதல் ஆகியவற்றை இந்த பூச்சிகளை பார்த்து தெரிந்துகொள்ள முடியும். காடுகள் அழிந்து வரும் நிலையில், பட்டாம்பூச்சிகளை பார்க்க முடிவதில்லை. சிறிய வகை பூச்சிகள், வண்டுகளை கண்காணித்து, பராமரிப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது வெப்பமயமாதலின் அளவும் அதிகமாக உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன் 250 பி.பி.எம்., ஆக இருந்த வெப்பமயமாதல் தற்போது 350 பி.பி.எம்., அளவுக்கு அதிகரித்துள்ளது. தொடர்ந்து அதிகமானால் வன உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் பாதிப்பு உண்டாகும். மிருகங்களுக்கு உணவு பற்றாக்குறை ஏற்படும். பூக்கள் பூப்பதும், காய்கள் காய்க்கும் தன்மையும்

தள்ளிப்போகும். தற்போதே ஒரு சில இடங்களில் பூக்கள் உரிய பருவத்தில் பூக்காமல், ஒரு சில மாதங்கள் முன்கூட்டியோ, தள்ளியோ பூப்பது குறிப்பிடத்தக்கது. காடுகளை ஆதாரமாக நம்பியுள்ள மிருகங்களின் தன்மையும் மாறிப்போகக்கூடிய வாய்ப்புள்ளது. எனவே, வரும் காலத்தில் வெப்ப மண்டல காடுகளின் மூலமாக உணவு, தண்ணீர் பாதுகாப்பு மற்றும் பல்லுயிர் இனப்பெருக்கத்தை அதிகரிக்க ஆய்வுகள் மேற்கொண்டு செயல்படுத்த வேண்டும். இவ்வாறு, நிறுவன இயக்குனர் கிருஷ்ணகுமார் பேசினார்.

தொடர்ந்து, தாவரங்கள் மற்றும் மிருகங்களுக்கு இடையிலான தொடர்பு, சுற்றுச்சூழல் தாக்குதலின் மதிப்பீடு, பல்லுயிர் பரவலின் பாதுகாப்பு உட்பட பல்வேறு தலைப்புகளில் விளக்கம் அளிக்கப்பட்டது. இமாச்சல பிரதேசம், கர்நாடகா, கேரளா, ஆந்திரபிரதேசம் உட்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து வனவியல் விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர்.

**காய்கறி விலையால் மண்டை காய்கிறதா? : வாழை இருக்கே வாழ வைக்க...**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 29,2010,21:34 IST

சோமனூர் : காய்கறிகள் ரகங்கள் அபரிமிதமாக விலை உயர்ந்து வரும் நிலையில், அதற்கு மாற்றாக வாழை ரகங்களைப் பயன்படுத்தலாம் என விவசாயிகளால் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக வெங்காயத்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் விலை கடுமையாக உயர்ந்தது. வெளிநாடுகளில் இருந்து வெங்காயத்தை மத்திய அரசு இறக்குமதி செய்தும், மாநில அரசு ரேஷன் கடையில் விற்பனை செய்தும் கூட இன்று வரையிலும் வெங்காய விலையில் பெரிய மாற்றமில்லை. ஏழைகள் யாரும் வெங்காயம் வாங்க முடியாத நிலை தொடர்கிறது.

அதன் தொடர்ச்சியாக, தக்காளி, கத்தரிக்காய் போன்ற நாட்டுக் காய்கறிகள், காரட், பீன்ஸ், முட்டை க்கோஸ், உருளைக்கிழங்கு போன்ற மலைப்பகுதியில் விளையும் காய்கறிகள் உள்ளிட்ட அனைத்து காய்கறிகளின் விலையும் தாறுமாறாக உயர்ந்து வருகிறது. தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்பு, காய்கறிகளின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியாத நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

அதே சமயம் வாழை விவசாயிகள் தங்கள் உற்பத்திக்கு உரிய விலை கிடைக்காமல் அவதிப்படும் நிலையும் காணப்படுகிறது. வாழைப் பொருட்கள் அனைத்தும், குறைந்த விலையில் கிடைப்பதால் காய்கறிக்கு மாற்றாக வாழை ரகங்களைப் பயன்படுத்தலாம் என்று வாழை விவசாயிகள் ஆலோசனை தெரிவிக்கின்றனர்.

அரசூரைச் சேர்ந்த இயற்கை விவசாயி ராமசாமி கூறியதாவது: காய்கறிகளின் விலை உயர்வுக்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால், என்னதான் இவற்றின் விலை மார்க்கெட்டில்

உயர்ந்து காணப்பட்டாலும், இதை விளைவிக்கும் விவசாயிக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. அனைத்து காய்கறிகளின் விலையும் அதிகரித்து வரும் நிலையில் இவற்றின் பயன்பாட்டையும் குறைக்க முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாற்றாக வாழைப் பொருட்களை சமையலுக்குப் பயன்படுத்தலாம். மற்ற பழங்களைக் காட்டிலும் அதிக சத்து நிறைந்த பூவன் ரக வாழை கோவை சுற்றுப்பகுதியில் சிறுமுகை, தெக்கலூர் உள்ளிட்ட பல பகுதிகளில் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால், இவற்றுக்கு கிலோ 6 ரூபாய் வரை தான் விலை கிடைக்கிறது. வாழைப்பூ, வாழைத்தண்டு, வாழைக்காய் இவற்றை சமையலுக்குப் பயன்படுத்தலாம். விலையும் குறைவு.

இவ்வாறு அவர் தெரிவித்தார். வாழை ரகங்களைப் போலவே, பால் பொருட்களின் விலையிலும் பெரிய உயர்வு இல்லை என்பதால் அவற்றையும் காய்கறிக்கு மாற்றாகப் பயன் படுத்தலாம் என்ற ஆலோசனையையும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## ***இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை கடலோர மாவட்டங்களில் இன்று மழைபெய்யும் வானிலை ஆராய்ச்சி மையம் தகவல்***

*சென்னை, டிச.30–*

*இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் இன்று மழைபெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.*

*பனி பெய்கிறது*

*தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் டிசம்பர் இறுதி வரை பெரும்பாலும் இருக்கும். சில வருடங்களில் மட்டும் ஜனவரி முதல் வாரம் முடிய நீடித்து இருக்கிறது. இந்த வருடம் டிசம்பர் மாதம் முடிய இன்னும் 2 நாட்களே உள்ளன. இந்த நிலையில் குளிர் காலமும் தொடங்குவதையொட்டி பனி பெய்துவந்தது. ஆனால் கடந்த 2 நாட்களாக சென்னை உள்பட பல மாவட்டங்களில் வானம் மேக மூட்டமாக காணப்படுகிறது. பனிபெய்யவில்லை. சில இடங்களில் மட்டும் பனிபெய்கிறது. ஆனால் மாலை 4 மணியில் இருந்தே குளிர் அடிக்கிறது.*

திடீர் என்று மேக மூட்டாக இருக்கிறதே என்ன காரணம் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரியிடம் கேட்டதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:–

குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை

இலங்கைக்கு அருகே தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது.

அதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் இன்று மழைபெய்யும். உள் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மழைபெய்யும்.

சென்னையில் வானம் மேக மூட்டமாக இருக்கும். சில இடங்களில் மழைபெய்ய வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

## ‘அமுல்’ பிராண்டு பால் விலை உயர்வு




இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

அகமதாபாத்

இந்தியாவில் பால் மற்றும் பால் பொருள்கள் உற்பத்தியில், குஜராத் கூட்டுறவு பால் விற்பனையாளர்கள் இணையம் முன்னணியில் உள்ளது. இந்த அமைப்பு ‘அமுல்’ என்ற பிராண்டில் பால் பொருள்களை விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம், பால் விலையை லிட்டருக்கு ரூ.2 வரை உயர்த்தி உள்ளது.

விற்றுமுதல்

இது குறித்து இந்த இணையத்தின் நிர்வாக இயக்குனர் ஆர்.எஸ்.சோதி கூறுகையில்,

"பால் விலை உயர்வு குஜராத் மற்றும் புதுடெல்லியில் டிசம்பர் 30-ந் தேதியிலிருந்தும், நாட்டின் இதர பகுதிகளில் ஜனவரி 3-ந் தேதியிலிருந்தும் அமலுக்கு வருகிறது" என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "கோல்டு அண்ட் சக்தி பிராண்டு பாலின் விலை லிட்டருக்கு ரூ.2 என்ற அளவிலும், தாசா, ஸ்லிம் மற்றும் ட்ரிம் பிராண்டுகளின் விலை லிட்டருக்கு ரூ.1 என்ற அளவிலும் உயர்த்தப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

இந்த அமைப்பின் விற்றுமுதல் ரூ.8,000 கோடிக்கும் அதிகமாக உள்ளது. இந்த அமைப்பின் பால் உற்பத்தி நாள் ஒன்றிற்கு சராசரியாக 91 லட்சம் லிட்டர் என்ற அளவில் உள்ளது. இந்த அமைப்பிற்கு குஜராத்தில் 13 மாவட்ட கூட்டுறவு நிலையங்கள் உள்ளன. அங்கு 12,000 கிராமங்களில் சுமார் 29 லட்சம் பால் பண்ணையாளர்கள் மூலம் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

கால்நடை தீவனங்கள் விலை உயர்வு, தொழிலாளர்களுக்கான சம்பளச் செலவினம் அதிகரிப்பு, எரிபொருள் விலை உயர்வு போன்ற காரணங்களால் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று இந்த இணையத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நடப்பு 2010-11-ஆம் வேளாண் பருவத்தில் நாட்டின் தானிய உற்பத்தி அதிகரிக்கும்: மத்திய வேளாண் அமைச்சகம் மதிப்பீடு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010-11-ஆம் வேளாண் பருவத்தில் (ஜூலை -ஜூன்) நாட்டின் தானிய உற்பத்தி கடந்த 2008-09-ஆம் பருவத்தில் இருந்ததை விட மேலும் அதிகரிக்கும் என மத்திய வேளாண் துறை அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாதகமான பருவநிலை

கடந்த 2008–09–ஆம் ஆண்டில், நாட்டின் ஒட்டுமொத்த தானிய உற்பத்தி 23.45 கோடி டன் என்ற அளவில் இருந்தது. இந்த நிலையில், நடப்பு வேளாண் பருவத்தில், நாட்டின் பல மாநிலங்களில், சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. மேலும், சாதகமான பருவநிலை போன்றவற்றால், இவ்வாண்டில், நாட்டின் ஒட்டுமொத்த தானிய உற்பத்தி நல்ல அளவில் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2008–09–ஆம் பருவத்தில் 9.92 கோடி டன் நெல் உற்பத்தியாகி இருந்தது. இதே பருவத்தில், கோதுமை உற்பத்தி 8.07 கோடி டன்னாகவும், பருப்பு வகைகள் உற்பத்தி 1.46 கோடி டன்னாகவும், இதர தானியங்கள் உற்பத்தி 4 கோடி டன்னாகவும் இருந்தது. ஆக மொத்தம், அவ்வாண்டில் ஒட்டுமொத்த தானிய உற்பத்தி 23.45 கோடி டன்னாக இருந்தது.

நடப்பு வேளாண் பருவத்தில், நாட்டின் நெல் உற்பத்தியில் 40 லட்சம் டன் குறையும் என்ற மதிப்பீடு உள்ள போதிலும், அதனை ஈடுசெய்யும் வகையில், பருப்பு வகைகள் உற்பத்தி கூடுதலாக 20 லட்சம் டன் என்ற அளவிலும், கோதுமை உற்பத்தி கூடுதலாக 10 லட்சம் டன் என்ற அளவிலும் உயரும் என மத்திய வேளாண் துறை செயலாளர் பி.கே.பாசு தெரிவித்தார்.

உற்பத்தி இலக்கு

நடப்பு வேளாண் பருவத்தில், 8.20 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பருப்பு வகைகள் உற்பத்தி இலக்கு 1.65 கோடி டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி, மேற்கண்ட இலக்குகள் சுலபமாக எட்டப்பட்டு விடும் என பாசு குறிப்பிட்டார்.

சென்ற 2009–10–ஆம் வேளாண் பருவத்தில், நாட்டின் பல மாநிலங்களில் வறட்சி நிலவியதால், அவ்வாண்டில் ஒட்டுமொத்த உணவு தானியங்கள் உற்பத்தி 21.82 கோடி டன்னாக குறைந்து போனது.

பருப்பு வகைகள்

இவ்வாண்டு ரஃபி பருவத்தில், இதுவரையிலுமாக கூடுதலாக 11 லட்சம் ஹெக்டேரில் கோதுமை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில், பருவநிலை சாதகமாக உள்ளதால், ரஃபி பருவத்தில் கோதுமை உற்பத்தி அமோகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நடப்பு வேளாண் பருவத்தில், நாட்டின் பல பாகங்களில் பருப்பு வகைகள் உற்பத்தி செய்யும் பரப்பளவும் அதிகரித்துள்ளது. இதனால், இவ்வாண்டு பருப்பு வகைகள் உற்பத்தி 1.65 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதேசமயம், பருப்பு வகைகள் உற்பத்தி 1.70 கோடி டன்னாக

*இருக்கும் என வர்த்தகர்கள் மதிப்பீடு செய்துள்ளனர்.*
*பருப்பு வகைகள் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில், இவற்றின் இறக்குமதியை குறைத்துக் கொள்ள முடியும். உள்நாட்டில், தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு பருப்பு வகைகள் உற்பத்தி இல்லாததால், நம்நாடு ஆண்டுதோறும் 35 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்து கொள்கிறது. தற்போதைய நிலையில், உள்நாட்டில் ஆண்டுக்கு 1.80–1.90 கோடி டன் பருப்பு வகைகளுக்கு தேவைப்பாடு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

## *டாட்டா காபி 50% இடைக்கால டிவிடெண்டு*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*மும்பை*

*டாட்டா குழுமத்தின் ஓர் அங்கமான டாட்டா காபி நிறுவனம், நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டிற்கு, அதன் பங்குதாரர்களுக்கு 50 சதவீத இடைக்கால டிவிடெண்டை அறிவித்துள்ளது.*
*இதற்கு இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.10 முகமதிப்பு கொண்ட பங்கு ஒன்றிற்கு ரூ.5 இடைக்கால டிவிடெண்டாக கிடைக்கும்.*
*சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், இந்நிறுவனம் ரூ.106.88 கோடி வருவாயில், ரூ.10.93 கோடியை நிகர லாபமாக ஈட்டியிருந்தது.*

## கூடலூர் பகுதியில் விதை இஞ்சிக்கு நல்ல விலை கிடைப்பதால் வியாபாரிகள் மகிழ்ச்சி கூடலூர் பகுதியில் விதை இஞ்சிக்கு நல்ல விலை கிடைப்பதால் வியாபாரிகள் மகிழ்ச்சி



கூடலூர் பகுதியில் விளைந்து வரும் இஞ்சி பயிர்களை படத்தில் காணலாம்.

*கூடலூர், டிச.30–*

*கூடலூர் பகுதியில் விதை இஞ்சிக்கு நல்ல விலை கிடைத்து வருவதால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும் காய்ந்த இஞ்சிக்கும் நல்ல விலை இருந்து வருவதால் இஞ்சியின் விலை இன்னும் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*இஞ்சி மகசூல்*

*நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், பந்தலூர், மசினகுடி பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் இஞ்சி விளைவிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் மே மாத இறுதியில் இஞ்சி விவசாயம் தொடங்கப்பட்டு சுமார் 6 மாத காலத்திற்கு பிறகு இஞ்சி அறுவடை மேற்கொள்ளப் படுகின்றன.*

*கூடலூர் பகுதியில் இஞ்சி மகசூல் அதிகரித்துள்ளன. சில பகுதிகளில் வேர் அழுகல் நோயால் பயிர்கள் பாதிக்கப் பட்டாலும், குறிப்பிடும்படி யாக இஞ்சி விளைச்சலில் பாதிப்பு ஏற்பட வில்லை. தேயிலை விலை வீழ்ச்சியால் இஞ்சி, குறுமிளகு உள்ளிட்ட பணப் பயிர்கள் மீது விவசாயி கள் அதிகளவு கவனம் செலுத்தி வருகின்றனர்.*

*விதை இஞ்சிக்கு நல்ல விலை*

*இந்த நிலையில் இஞ்சிக்கு போதிய விலை இல்லாமல் இருந்து வந்தது. இதனால் இஞ்சி விவசாயிகள் மத்தியில் கலக்கம் ஏற்பட்டது. ஆனால் கேரளா பகுதியில் காய்ந்த இஞ்சிக்கு (சுக்கு) அதிக கிராக்கி உள்ளதால் காய்ந்த இஞ்சியின் விலை அதிகரித்*

*துள்ளது. இதனால் இஞ்சியின் விலையும் உயர்ந்து வருகிறது.*

*மேலும் விதை இஞ்சியின் விலையும் உயர்வடைந் துள்ளன. விதை இஞ்சி கிலோ ரூ.40 வரையும், மூடைக்கு (60 கிலோ) ரூ.2400 வரையும் விலை கிடைப்பதாக இஞ்சி வியாபாரிகள் மகிழ்ச்சி தெரி வித்துள்ளனர். இது குறித்து விசாரித்த போது கேரளாவில் காய்ந்த இஞ்சியின் தேவை அதிகரித்துள்ள தால் கூடலூர் பகுதியில் விளைகின்ற இஞ்சியின் விலையும் உயர்ந்து வருகிறது என வியாபாரிகள் தெரிவித்த னர். இதனால் இனி வரும் காலங்களில் இஞ்சியின் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.*



# வேளாண்மை செய்திகள்

## அதிக சத்துக்கள் நிறைந்த 'சீமைப்பலா'



முக்கனிகளில் ஒன்றான பலா மாவுச்சத்து, வைட்டமின் ஏ மற்றும் பி என பல்வேறு சத்துக்களை கொண்டது. இதனை சீமைப்பலா என்றும் அழைப்பதுண்டு. பிரெட் புரூட், ஈரப் பலா, கறிபலா என்ற வகைகளும் உண்டு. பலாப்பழம் சாப்பிட சுவை மிகுந்தது. பழாப் பிஞ்சு, முற்றிய காய் சமையலுக்கு ஏற்றது. தென்னிந்தியாவில் சமையலுக்கு மிகவும் பிரபலம்.

### பலா சாகுபடி

இவை மேற்கு மண்டல கடற்கரை ஓரம், மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளான நீலகிரி, கீழ்பழனிமலை, வயநாடு, குற்றாலம், ஆனை மலை பகுதிகளில் அதிக அளவில் விளைவிக்கப்படுகிறது. ஒரு சில இடங்களில் விதைகள் மூலம் தானாக முளைத்து, மரத்தில் இருந்து உதிரும் இலைகளை உரமாக எடுத்துக் கொண்டு வளருகிறது. இதற்கு தண்ணீர் வசதி அவசியம்.

சாகுபடி முறை என்றால் கரிமச்சத்து நிறைந்த செம்பொறை மண், காற்றில் ஈரப்பதம் மிக்க பகுதிகள், சூடான தட்பவெப்பம் நிறைந்த பகுதிகளில் நன்றாக வளரும் தன்மை கொண்டது. பலா விதையுள்ள, விதையற்ற இரு ரகங்கள் உள்ளது. இதில் விதையில்லா ரகங்கள் சாகுபடிக்கு ஏற்றது. இவை 20 செ.மீ. நீளம், 2½ செ.மீ. விட்டம் கொண்ட வேர்த்தண்டுகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யப்படுகிறது.

### அதிக மகசூல்

வேர்த்தண்டுகளை படுக்கை நிலையில் நடவு செய்ய வேண்டும். செங்குத்தாக நடவு செய்தல் கூடாது. நடவின் போது மரத்திற்கு நன்கு மக்கிய 10 கிலோ தொழு உரம் இட வேண்டும். நடவு செய்த 5 அல்லது 6 வருடங்களில் காய்கள் அறுவடைக்கு தயாராகி விடும்.

காய்ப்பிடிப்பை அதிகரிக்க மகரந்த சேர்க்கை செய்ய வேண்டும். ஒரு மரத்தில் இருந்து ஆண்டுக்கு 50 முதல் 100 காய்கள் வரை மகசூலாக கிடைக்கும். பலாப்பழங்களுக்கு நகர்புறங்களில் மவுசு அதிகம் என்பதால் அதிக அளவில் விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெறலாம்.

-அகமது கபீர், வேளாண் ஆலோசகர்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம்.

## மருத்துவ குணம் நிறைந்த 'திப்பிலி



**ப**ல்வேறு மருத்துவ குணங்கள் கொண்டது திப்பிலி. இதன் தேவை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. திப்பிலி மரவகை தாவரம். 2–ல் இருந்து 3 அடி உயரமே வளரக்கூடியது. இலைகள் நீளமாகவும், காய்கள் முள்கள் போல் இருக்கும். உண்சரம், உலவைநாசி, சாமன், குடாரி, கோலி, மாகதி, பிப்பிலி என பல்வேறு பெயர்கள் உண்டு.

### மருத்துவத்தில் திப்பிலி

ஆனை திப்பிலி, அரிசி திப்பிலி என்ற வகைகள் உண்டு. திப்பிலியை பொடியாக்கி தேனில் கலந்து சாப்பிட வயிற்று வலி, நீர்க்கோவை, தொண்டை கமறல், இருமல், வாயு தொல்லை குணமாகும். தேமல், ஆஸ்துமா, தொழு நோய்களை உண்டாக்கும் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டது. சித்த மருத்தவத்தில் பல்வேறு நோய்களுக்கு மருந்துகள் தயாரிப்பதற்கு திப்பிலி பயன்படுத்தப்படுகிறது.

பூக்கள் பூக்கும் ரகமான திப்பிலி வகை மருத்துவத்திற்கு பயன்படுகிறது. இதில் ரெசின், கொழுப்பு, தாது உப்பு, சுண்ணாம்பு, இரும்பு, நியாசின் போன்ற பல்வேறு ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இவை நேபாளம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும், இந்தியாவில் அஸ்ஸாம், காசி, கேரளா ஆகிய மாநிலங்களிலும் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகிறது.

### சாகுபடி முறைகள்

விஸ்வம் திப்பிலி, ஏற்காடு பி.எல்–9 ரகங்கள் சாகுபடிக்கு மிகவும் பிரபலமானவை. இவை செம்மண் அல்லது இருமண் கலந்த பொறைமண் வகையில் நன்றாக வளரும் தன்மை கொண்டது. காற்றில் ஈரத்தன்மை மிக்க தாழ்வான மலைச்சரிவுகளில் பயிரிட ஏற்றது. சாகுபடி செய்வதற்கு முன் மண்ணை நன்றாக உழுது எக்டேருக்கு 20 முதல் 25 கிலோ தொழு உரமிட்டு பண்படுத்த வேண்டும்.

மலைப்பகுதி மற்றும் சோலைமண் மிகுந்த பகுதிகளுக்கு 10 டன் தொழு உரம் போதுமானது. மண்ணை பண்படுத்திய பின்பு 3 அடி இடைவெளியில் பாத்திகள் அமைத்து, அதன் பக்கவாட்டில் கணுக்கள் உடைய தண்டுகளை நடலாம். நீர் வடிகால் வசதியுள்ள இடமே சாகுபடிக்கு மிகவும் ஏற்றது.

### நிழல்–ஊடுபயிர்

திப்பிலி மர வளர்ச்சிக்கு நிழல் மிகுந்த பகுதி மிகவும் அவசியம் ஆனது. இது போன்ற வசதி இல்லாதவர்கள் நிழலுக்கு முருங்கை, வாழை போன்றவற்றை நடவு செய்யலாம். அவரை, சோயா போன்றவற்றை ஊடுபயிராகவும் நடவு செய்யலாம். இதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருமானம் பெற முடியும். திப்பிலி சாகுபடி செய்த முதல் ஆண்டில் 750 கிலோ உலர்ந்த காய்களும், 3–ம் ஆண்டில் 1,500 கிலோ காய்களும் மகசூலாக கிடைக்கும்.

## களர், உவர் மண்ணுக்கேற்ற நெல் ரகங்கள்

**இ**ந்தியாவில் நெல் பயிர் ஒரு முக்கிய தானிய பயிராகும். பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப நெல்லில் விளைச்சலை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். இந்த நிலையில் களர் மற்றும் உவர் நிலங்களுக்கு ஏற்ற 3 உயர் ரக விளைச்சல் ரகங்களான திருச்சி–1, 2 மற்றும் டி.என்.யூ திருச்சி–3 ஆகிய ரகங்கள் வெளியிடப்பட்டு உள்ளன.

களர், உவர் நிலங்களுக்கு ஏற்ற திருச்சி–1 ரகம் ஐ.ஆர்172-2-2, பீபீ 1-2பி, பி 1-9 கலப்பின ரகமாகும். இந்த ரகம் 135 நாளில் அறுவடைக்கு வரும். எக்டேருக்கு 4 முதல் 4.5 டன் வரை விளைச்சல் தரக் கூடியது. தமிழ்நாட்டில் சம்பா, தாளடி ஆகிய பட்டங்களில் பயிர் செய்ய ஏற்ற ரகமாகும். இந்த ரகம் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை எதிர்த்து வளரும் திறன் கொண்டது.

இதே போல் திருச்சிஆர்-2 ரகம் ஐஇடி 6238, ஐ.ஆர்-36 கலப்பு இன ரகமாகும். இந்த ரகம் களர், உவர் நிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்றதாகும். குறுவை, கோடை பட்டங்களில் பயிர் செய்யலாம். இந்த ரகம் 135 நாட்களில் அறுவடைக்கு வருவதுடன் எக்டேருக்கு 5 டன் வரை விளைச்சலை தரக்கூடியதாகும்.

டி.என்.யூ திருச்சி-3 என்று அழைக்கப்படும் இந்த ரகத்தில் ஏ.டி.டி.டீ-43, சம்பா கலப்பின ரகம் கடந்த ஆண்டில் வெளியிடப்பட்டது. களர் நிலங்களில் பயிர் செய்ய ஏற்ற இந்த ரகம் 135 நாட்களில் அறுவடைக்கு வரும். இந்த ரகம் பின்சம்பா, சம்பா, தாளடி பருவங்களில் பயிரிடலாம். எக்டேருக்கு 5,883 கிலோ விளைச்சல் தர வல்ல இந்த ரகம் இட்லி அரிசி தயாரிக்க ஏற்றதாகும். மேலும் ஏ.டி.டீ-46 ஐ காட்டிலும், 10.8 சதவீதம் அதிக விளைச்சல் தர வல்லது. இந்த ரகம் இலைச்சுருட்டு புழு, குருத்துப்பூச்சி, புகையான் தாக்குதல் மற்றும் குலைசுருட்டு நோய்க்கு எதிர்ப்பு திறன் கொண்டு வளரும் தன்மை கொண்டது.